இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்ப கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் **2019**
**EPD3336/ ESD1136** – முன்பிள்ளைப் பருவ நிறுவனங்கள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளின் முகாமைத்துவம்
இறுதிப்பரீட்சை - மட்டம் 03
02 மணித்தியாலங்கள்

---

காலம் : மு.ப 10.00 – நண்பகல் 12.00 திகதி : 09.03.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

01. 'தலைமைத்துவம்' என்னும் பதத்தினை வரைவிலக்கணம் செய்க?

02. முகாமைத்துவச் செயன்முறைகளை சுருக்கமாக விளக்குக?

03. ஆரம்பப் பாடசாலை அதிபர் ஒருவரின் தலைமைத்துவப் பண்புகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?

04. நாட்காப்பகம் ஒன்றில் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான முகாமைத்துவ செயற்பாடுகள் ஐந்தினைக்(05) எழுதுக?

05. "*சுயக் கணிப்பீடு முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது!*"
நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகிறீர்களா? நான்கு(04) காரணங்களின் துணையுடன் உங்களது விடையை நியாயப்படுத்துக?

06. உங்களுடைய முன்பள்ளி ஒன்றின் கற்றல் சூழல் என்பதால் நீங்கள் கருதுவது யாது?

07. முன்பள்ளி ஒன்றின் கற்றல்-கற்பித்தல் செயன்முறையினை மேற்கொள்ளும் போது வாராந்த திட்டம் ஏன் அத்தியாவசியமானது? உங்களது விடைக்கான ஐந்து (05) காரணங்களைத் தருக?

08. மாஸ்லோவின் தேவைக் கொள்கையினை சுருக்கமாக விளக்குக?

(05x08= 40 புள்ளிகள்)

## பகுதி II

09. I. மூன்று(03) தலைமைத்துவப் பண்புகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?
(08 புள்ளிகள்)

II. ஆரம்பப் பாடசாலை ஒன்றின் வெற்றிகரமான தலைமைத்துவ வகிபாகத்தில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் எவை?

(12புள்ளிகள்)

10. I. நீங்கள் முன்பள்ளி ஒன்றிற்கான பௌதிக மற்றும் மனித வளங்களை பெற்றுக் கொண்டு, அவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்வீர்கள் என்பதனை உதாரணங்களின் துணையுடன் விளக்குக?
(10 புள்ளிகள்)

II. பொருத்தமான உதாரணங்களைக் குறிப்பிடுவதனூடாக, ஆரம்பப் பாடசாலைகளின் தரத்தினைப் பேணுவதில் பெற்றோருக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம் வகிக்கும் முக்கியத்துவம் எத்தகையது என விபரிக்குக?

(10 புள்ளிகள்)

11. I. 'ஒழுக்க விருத்தி' எனும் பதத்தினை வரைவிலக்கணம் செய்க?
(08 புள்ளிகள்)

II. மாணவர்களிடத்தில் ஒழுக்க விருத்தியை ஏற்படுத்துவதில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் ஒருவரின் பொறுப்புக்களை பகுப்பாய்வு செய்க?

(12புள்ளிகள்)

12. I. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குப் பொருத்தமான இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் ஐந்தினைப் (05) பட்டியற்படுத்துக?

(05 புள்ளிகள்)

II. மேலே நீங்கள் குறிப்பிட்ட செயற்பாட்டில் இருந்து ஒரு செயற்பாட்டினைத் தெரிவு செய்து அச்செயற்பாட்டினை ஆரம்பப்பிரிவு மாணர்களுக்காக எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள் என விளக்குக?

(07 புள்ளிகள்)

III. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் ஐந்தினை(05) எழுதுக?

(08 புள்ளிகள்)

13. I. முன்பள்ளி ஒன்றின் நாளாந்த செயற்பாடுகளை திட்டமிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய செயற்பாடுகள் யாவை?
(10 புள்ளிகள்)

II. முன்பள்ளி ஒன்றின் நாளாந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக கிடைக்கக்கூடியதாகவுள்ள கற்றல்- கற்பித்தல் சாதனங்களின் இயல்புகள் ஐந்தினை (05) விபரிக்குக?

(10 புள்ளிகள்)